Srimate Ramanujaya Nama:

KINCHITKARAM DHARMA SAMSTHAPANAM

# ஜெய் ஹநுமான்!





வெளியிடுவோர்:
கிஞ்சித்காரம்
தர்மஸம்ஸ்தாபநம்

Phone : 7598417682, 9790531919

Email : kinchitdharmam@gmail.com

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

நமக்கு ராமாயணம் என்ற உடனே, ஞாபகம் வரும் முக்கியமான கதாபாத்திரங்களில் ஒன்றுதான் ஹனுமான்!

ஆம் !ஹனுமான் !என்ற பெயர் கேட்டவுடன், நம் அனைவருக்கும் உடல் சிலிர்க்கிறது அல்லவா ?!

எவ்வளவு பயந்தவனாக இருந்தாலும், சோகத்துடன் இருப்பவனாய் இருந்தாலும், ஜெய் ஹனுமான்!ஜெய் ஆஞ்சநேயா !என்று சொன்னவுடன்,ஏதோ ஒரு இனம் புரியாத தைரியம் வருகிறது அல்லவா?

அப்படிப்பட்ட வாயுபுத்திரன் அனுமானின் பிரபாவத்தை நாம் எளிதில் தெரிந்து கொள்ள முடியுமா என்ன ?!

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்



எப்பேர்பட்ட ராமகங்கைர்யம்
செய்தவர்! சீதா மாதாவின்
பரிபூரண அருளை பெற்றவர்!

சஞ்சீவினி மலையை
கொண்டு வந்து அந்த
லட்சுமணனின் உயிரையே
காப்பாற்றியவர்!





ராம பக்தியின் எல்லையாக நின்று
அந்த ராமனை கண்ட கண்களால்
அந்த வைகுந்த நாதனையும்
காணமாட்டேன், என்று கூறியவர்!

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

ராம நாமத்தின் பிரபாவத்தை
நாம் அனைவரும் உணரச்
செய்தவர்!





ராமாயணத்தில் மட்டுமின்றி
மகாபாரதப் போரின் போதும் நம்
கண்ணனுக்கு உறுதுணையாக
நின்றவர்!

அப்பப்பா !!! இன்னும்
எத்தனை சொல்ல அவரைப்
பற்றி?!



சீதாராமர் கோயில்கள் கூட குறைவு என்று சொல்லிவிடலாம், ஆஞ்சநேயர் கோயில் இல்லாத ஊர் உண்டா??!





கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

பல பல கோயில்களிலும், பல பல ராமாயண நிகழ்வுகளை, உணர்த்தும் வண்ணம் ,நமக்கு காட்சி தந்து, அருள் புரியும் ஸ்ரீ ஹனுமானின் கோயில்களை பற்றி இந்த பகுதியில் காண்போமா ?!

# கடையநல்லூர் அபயஹஸ்த ஆஞ்சநேயர்

இந்திரன் பிரம்மஹத்தி தோஷத்தை இந்த குளத்தில் குளித்துத்தான் , போக்கிக்கொண்டான். இத்தலத்தில் உள்ள ஹனுமனை ராமரே பிரதிஷ்டை செய்ததாக ஸ்தல வரலாறு கூறுகிறது.






ராமர் வானர வீரர்களுடன் தட்சிண தேசத்திற்கு வந்து தாகம் மிகுதியால் சுயம்பிரபா குளத்தில் தாகம் தீர்த்து கொண்டு நமஸ்கரித்து விட்டு சென்றார்.

ஹனுமன் தன் கரங்களில் அபய ஹஸ்தம் காட்டி அருள்பாளிக்கிறார்

# த்ரிநேத்ர - தசபுஜ ஆஞ்சநேயர்




**அனந்தமங்கலம் மற்றும் நன்மங்கலம் இவ்விரு ஸ்தலங்களில் ஹனுமன் தனது பத்து திருக்கரங்களிலும் ஆயுதம் ஏந்தி அருள்பாளிக்கிறார்.**

**முதுகின் இரு புறமும் கருடனுக்குரிய சிறகுகளோடு காட்சியளிக்கிறார் ஆஞ்சநேயர்**

# காரியசித்தி ஹனுமன்







கும்பகோணம் காரியசித்தி ஹனுமன் கோயிலின் நடுவில் நின்று, வலது புறம் சக்கரத்துடன் , இடது புறம் சங்குடனும் காட்சியளிக்கிறார் .

இவரை வணங்கினால், அனைத்து காரியமும் தடையின்றி நடைபெறும்!

# நாமக்கல் ஹனுமன்



**இத்தலத்தில் ஹனுமன், நரசிம்மரை வணங்கியவாறு நின்று, நமக்கெல்லாம் அருள்பாலிக்கிறார்!**

**இத்தலம், மிகவும் பிரசித்தி பெற்ற ஸ்தலமாக திகழ்கிறது!**

# விஷ்வருப ஆஞ்சநேயர்

## நங்கநல்லூர்

காண்டம் : சுந்தர காண்டம்
சர்கம் : 37
ஸ்லோகம் : 35,37



மலை போன்ற உடலையும், சிவந்த முகத்தினையும் , வஜ்ராயுதம் போன்ற கடை வாய்ப்பற்களையும், உடைய வாணராதிபதி மலை காடுகள் அனைத்தும் பிளந்து, எடுத்து செல்லும் சக்தியுடையவராய் விஷ்வரூபத்துடன் காட்சியளிக்கிறார்!

# சஞ்சீவி ஆஞ்சநேயர்

## காஞ்சிபுரம்

காண்டம் : யுத்த காண்டம்

சர்கம் : 74

ஸ்லோகம் : 69



இராமாயணத்தில் லட்சுமணரை காப்பாற்றுவதற்காக சஞ்சீவி மலையை எடுத்து வந்தார்!

இத்தலத்தில் ஹனுமன் தன் கரங்களில் மலையை ஏந்தியபடி வடதிசையை நோக்கி அயோத்தியை பார்த்தவாரே காட்சியளிக்கிறார்!

# சோளிங்கர்
# யோக ஆஞ்சநேயர்

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்






**காலன், நேயன் எனும் அரக்கர்களை வென்று சப்த ரிஷிகளை காத்தருளினார்.**

**அதன்படி சோளிங்கர் தலத்தில் ஹனுமன் திருக்கையில் சங்கு, சக்கரம் ஏந்தியபடி ஜபமாலையை வைத்துக்கொண்டு, யோக ஆஞ்சநேயராக காட்சியளிக்கிறார்!**

# விஜய ஆஞ்சநேயர்
## வேலூர்

காண்டம் : யுத்த காண்டம்
சர்கம் : 74
ஸ்லோகம் : 27





இத்தலத்தில் ஹனுமனின் இடது கரங்களில் கணையாழியை வைத்துக்கொண்டு, வலது கரத்தில் சௌகாந்திகா மலருடன், அபயஹஸ்தம் காட்டியருள்கிறார்!

# வினய ஆஞ்சநேயர்
## திருமழிசை

காண்டம் : யுத்த காண்டம்
சர்கம் : 128
ஸ்லோகம் : 78 to 83

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்






லங்கையில், சீதா தேவியை கண்ட ஹனுமன், பவ்யத்தோடு வணங்கி அவரிடம் கணையாழியை கொடுப்பார். அதன் மூலம், ராமர், சீதா மீது அவர் கொண்டுள்ள பக்தியை வெளிப்படுத்துவது, அவருடைய வினய குணமாகும். இத்தலத்தில் ஹனுமன் வினயமாக காட்சியளிக்கிறார்!

# நந்திக்ரம்: பரத்மிலன்



கிஞ்சித்காரம்

**இத்தலத்தில் ஹனுமனும், பரதனும் ஆலிங்கனம் செய்தார் போல் காட்சியளிக்கிறார். ராமரின் தூதனான ஹனுமனை, பரதன் ஆலிங்கனம் செய்தார்.**

# ஹனுமன் கடி , அயோத்தி






ஹனுமன் கர்ஹி அல்லது ஹனுமன் கடி அயோத்தியில், பக்த ஹனுமனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது உத்தரப்பிரதேசத்தில் , ராம ஜென்மபூமிக்கு அருகில் அமைந்துள்ளது. ஹனுமன் அயோத்தியை, குறிப்பாக ராம் கோட்டை, அதாவது, ராமரின் கோட்டை அரண்மனையை, ஹனுமன், கர்ஹியில் வசிக்கும் போது, பாதுகாக்கிறார். இது ஹனுமன் கோட் என்றும் அழைக்கப்படும் குகைக் கோயில்.

# வீர ஆஞ்சநேயர்
# கிருஷ்ணகிரி

காண்டம் : சுந்தர காண்டம்
சர்கம் : 41,42
ஸ்லோகம் : 35,36





இத்தலத்தில், ஹனுமன் தன் வீரத்திற்கு அறிகுறியாக தனது வலது கரத்தில் சஞ்சீவி மலையை தூக்கிய படியும் இடது கரத்தை தொடையில் வைத்து கொண்டு ஒரு கண் அயோத்தியை பார்த்தவாறு மறுகண் தன்னை நாடிவரும் பக்தர்களை கருணையுடனும் பார்த்தவாறு அருள்பாலிக்கிறார்

# சங்கட மோஷ ஹனுமன் வாரணாசி






'சங்கட' என்றால் , அனைத்து வித காரியங்களையும் தடையின்றி தீர்த்து வைக்கும் சக்தி படைத்தவராக திகழ்கிறார். ஆகவே , ஆஞ்சநேயரை வழிபட்டால் நமது கஷ்டங்களை போக்கி அருள்கிறார்!

# பால ஆஞ்சநேயர்
# குஜராத், இராமநாதபுரம்



காண்டம் : உத்தர காண்டம்
சர்கம் : 35
ஸ்லோகம் : 23,24



கிஞ்சித்காரம்

**இத்தலங்களில், ஆஞ்சநேயர் சன்னதிக்கு மேல், விமானத்திற்கு பதில் ஆஞ்சநேயர் வால் சுருட்டி அதன் மேல், சுதை வடிவில் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பு. வால் கோட்டை கோபுரத்தினுள் ராமர் , லட்சுமணர் மற்றும் சீதையுடன் அவரை, சேவிக்கும் வடிவில், பால ஹனுமனாக சேவை சாதிப்பார்!!**


# பால ஹனுமன்

## அஞ்சனாத்ரி: திருமலை

காண்டம் : உத்தர காண்டம்
சர்கம் : 35
ஸ்லோகம் : 23,24



இத்தலத்தில், ஹனுமன் குழந்தை வடிவில் தன் அன்னை அஞ்சனையின் மைந்தனாக, பால ஹனுமனாக காட்சியளிக்கிறார்!



# படி ஹனுமன்

## த்ரிவேணி சங்கம்

**இத்தலத்தில், ஹனுமன் பள்ளிகொண்ட திருக்கோலத்தில் காட்சி தருகிறார்! ராமாயண யுத்தம் முடிந்த பின்னர், ஹனுமன், இத்தலத்தில் வந்து தங்கினார்.**

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்





# அணைப்பட்டி வீரஆஞ்சநேயர்




அணைப்பட்டி வீரஆஞ்சநேயர் கோயில், திண்டுக்கல் மாவட்டத்தில், அணைப்பட்டியில் அமைந்துள்ள ஆஞ்சநேயர் கோயிலாகும்.

மூலவரான ஆஞ்சநேயர், ஆறடி உயரத்தில் உள்ளார். வலது கையால் சஞ்சீவி மலையை தூக்கியபடியும், இடது கையை தொடையில் வைத்தும் உள்ளார். இவருடைய கண்களில் ஒன்று அயோத்தியையும், மற்றொன்று பக்தர்களை பார்ப்பதாகவும் நம்புகிறார்கள். வைகை ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடும் காலத்தில், ஆஞ்சநேயரின் பாதம் அமைந்துள்ள இடத்தில் தண்ணீர் ஊற்றெடுக்கும் அதிசயத்தைக் காணலாம். மகாபாரத காலத்தில் பஞ்ச பாண்டவர்கள் வனவாசம் சென்றனர். அப்போது அவர்கள் அணைப்பட்டியில் உள்ள சித்தர்கள் மலையில் சிறிது காலம் தங்கி இருந்தனர், மேலும் பீமனுக்கு வைகை ஆற்றில் இருந்து தண்ணீர் எடுத்து கொடுத்து ஆசி வழங்கியதால், ஸ்ரீஜலகண்ட ஆஞ்ச நேயர் எனும் மற்றொரு பெயரையும் பெற்றுள்ளார்.

# ஹனுமன் தாரா ,சித்ரகூடம்







ஹனுமன் சிலையின் மேல் ஓடும் மென்மையான நீரோடை காரணமாக, இந்த இடம் ஹனுமன் தாரா என்று அழைக்கப்படுகிறது. பக்தர்களுக்கு, இதுவே மிக அழகான காட்சியாக இருக்கும். பஜ்ரங் பாலியின் சிலை (ஹனுமனின் மற்றொரு பெயர்) சிவப்புக் கல்லால் கட்டப்பட்டுள்ளது. இது கோவிலுக்குள் நுழையும் பக்தர்களையும் பார்வையாளர்களையும், கண்டுகொள்ளாமல், வளிமண்டலத்திற்கு தெய்வீக இருப்பை வழங்குகிறது!

# ஸ்ரீ ராமபக்த ஆஞ்சநேய சுவாமி

## மதுராந்தகம் ஏரிகாத்த ராமர் கோயில்

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

ராமபிரான் சீதையை மீட்க இலங்கை செல்லும் போது விபண்டக முனிவர் ஆசிரமத்தில் சில நாட்கள் தங்கினார்.






முனிவரின் வேண்டுதல் படி அயோத்தி திரும்பும் போது சீதையுடன் கல்யாண கோலத்தில் காட்சி தந்தார் ஹறனமனும் இத்தலத்தில் ராமர் எதிர்புறம் நின்று அவரை வணங்கியபடி அருள்பாலிக்கிறார்

# பாரிதாள ஹனுமன்
# ஆந்திரா



**இத்தலத்தில் 135 அடி உயரத்துடன் நின்று தன் பிரபாவங்களை வெளிப்படுத்தும் வண்ணம் தன் கரங்களில் கதையுடன் நின்று பாரிதாள ஹனுமனாக காட்சியளிக்கிறார்!**

# இந்தோனேசியா
# பாலி(Bali) மந்திர்



இத்தலத்தில் ஹனுமன் இடது கரத்தில் சஞ்சீவி மலையை தூக்கியவாறு வலது கரத்தில் பக்தர்களுக்கு அபயம் காட்டி அருள்பாளிக்கிறார்.

# பஞ்சமுக ஹனுமான் பாகிஸ்தான்

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

இத்தலத்தில் ஹனுமன் ஐந்து முகங்களையுடைய நரசிம்மர், வராஹர், ஹனுமன், ஹயக்ரீவர், கருடன் ஆகிய ஐந்து திருமுகங்களைக் கொண்டு அருள்பாலிக்கிறார். இக்கோவில் மிகவும் பழமை வாய்ந்ததாக இயற்கையான ஹனுமன் திருவுருவ சிலை கொண்டது.





# ஹனுமன் தேவ் மந்திர்
# தாய்லாந்து



கிஞ்சித்காரம தர்மஸம்ஸ்தாபநம்

இத்தலத்தில், ஹனுமன் ராமரை வணங்கியவாறு பக்த ஹனுமனாக காட்சியளிக்கிறார்! தாய்லாந்தில் ஹனுமன் இடது கரத்தில் சஞ்சீவி மலையை ஏந்தி கொண்டு மற்றொரு கரத்தில் கதையுடன் நின்று, தன்னை நாடி வரும் பக்தர்களை காக்கிறார்!!

# அங்கோர் ஹனுமன்

## கம்போடியா

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்





இத்தலத்தில் ஹனுமன் தனது வீரத்திற்கு அறிகுறியாக, பலசாலியாக , 1000 யோஜனை தூரம் தாண்ட கூடிய சக்தி படைத்தவராக திகழ்கிறார். யுத்தத்தில் ராமரை தன் தோளில் ஏந்தி கொண்டு போரிட்டார். ஆகவே ஹனுமனை வணங்கினால் சகல காரியமும் வெற்றி பெறும்.

இதுவரை இந்தியாவிலும், உலகம் அனைத்திலும் உள்ள ஹனுமன் சன்னதிகளையும் அவரின் ப்ரபாவங்களையும் பார்த்தோம். ராம நாமம் எங்கெல்லாம் ஜெபிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் ஹனுமனின் நாமம் போற்றப்படுகிறது!

ராமனின் தூதனாக சென்று சீதையை கண்டுபிடித்து ராம ராவண யுத்தத்தில் பங்கு கொண்டு,எப்பொழுதும் ராம சீதா லட்சுமணரை தன் நெஞ்சில் ( திருமார்பில்) வைத்து கொண்டு ராம நாமம் ஜெபித்தபடி காட்சியளிக்கிறார். ஹனுமன் பல திருத்தலங்களில் பல திருக்கோலங்களில் வீரத்துடன், யோக நிலையில், பவ்யத்துடன், அருள் பாலிக்கிறார். ராமரின் திருவாயால் 'சிரஞ்சீவி'என்று அழைக்கப்படுகிறார். ஹனுமனை வழிபட்டால் மன உறுதி, பயம், நோய் நொடி விலகும். நம் அனைத்து துன்பங்கள் வெப்பம் பட்ட வெண்ணெய் போல கரைந்து போகும்!

**யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர க்ருதமஸ்த காஞ்சலிம்
பாஷ்பவாரி பரிபூரண லோசனம்
மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம்**

'எங்கெல்லாம் ஸ்ரீராம நாமம் ஒலிக்கிறதோ, அங்கெல்லாம் பக்திப் பரவசத்துடன் ,கண்களில் நீர் மல்கக், காட்சி தந்து கொண்டிருப்பவர் எவரோ, அவரே ஹனுமன் என்று தெரிந்துகொள் '

இதுதான் இந்த ஸ்லோகத்தின் பொருள். பக்திபூர்வமாக ராமநாமம் ஜபிக்கும் அனைவரும் ஆஞ்சநேயரின் அருளைப் பெற்று சிறக்க வாழலாம்!!

குறிப்பு:
மேலுள்ள தகவல்கள் அனைத்தும் கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபனத்தின் சேவகர்களால் இணையதளத்திலிருந்து சேகரித்து எழுதப்பட்ட ஒரு முயற்சி.



# ஜெய் ஸ்ரீ ராம் !